RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s65

OPEN ACCESS

# சூல் புதினத்தில் நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் மரபுகள்

**க. தமிழ்செல்வி அ, *, பெ. தமிழரசன் அ**

அ தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்- 636011, தமிழ்நாடு, இந்தியா

ஆ தமிழ்த்துறை, பி.எம்.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தர்மபுரி-636705, தமிழ்நாடு, இந்தியா

# Livelihood of the Folk People in the novel Sool

**K. Tamilselvi [a, *], P. Thamilarasan**

[a] Department of Tamil, Periyar University, Salem-636011, Tamil Nadu, India.

[b] Department of Tamil, P.M.P. Arts and Science College, Dharmapuri-636705, Tamil Nadu, India.

* Corresponding Author: tamilmoorthi85@gmail.com

Received: 30-09-2021
Revised: 12-04-2022
Accepted: 18-04-2022
Published: 15-06-2022

Check for updates

**ABSTRACT**

Culture is a kind of practice and social behaviour of a particular group of people in the society meant for organizing their lives. It can be attained through the four virtues that are moral, material, pleasure and austerity which is connected to the integral and external part of human life. Tamil people have strongly rooted in its classical language, culture and tradition for more than two thousand years and it has been successfully reflected in its literature which is renowned worldwide for having a great impact on other countries (foreigners). This code of culture and tradition is based on the integral and intellectual insight of Tamil people, not depend on their economic values, this kind of values are found in the novel 'Sool' written by the Sakhithya Akademi Award (2019) winning writer So.Dharman who has traced out from the life of Urulaikkudi people depicting their agricultural practices and water resource management especially on various forms of their worship, festival, medicine, rituals and conventional beliefs. These are closely connected to their daily routine life and this research paper is briefly focused on the rustic lives, practices of Tamil people described by the writer So. Dharman. Thus, culture is so called identity and inheritance of Tamil people in and around the world.

**Keywords:** Dharman, Sool, Thelakinaru, Mazhaiyai Vazhiyanaputhal, Solavadai, Pachilai Vaidhiyam, KedaKaval

## முன்னுரை

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றியவர்கள் தமிழர்கள். அவர்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கியதை அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் ஆவணப்படுத்தியுள்ளன. அப்பண்பாடு என்பது நம்பிக்கை, பழக்கவழக்கம், சமுதாய அக்கறை, கலை போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்டது. அவை போன்ற சிறந்த பண்புகளால்தான் மனிதன் விலங்குகளிடமிருந்து வேறுபட்டு நிற்கிறான். அவன் உள்ளத்தில் சிறந்த அனுபவங்கள் நிறைந்து, பண்பட்டு, அவை பண்பாடுகளாக உருப்பெறுகின்றன. மக்கள் வாழும் பகுதி கிராமம், நகரம் என இரண்டு பிரிவுகளைக் கொண்டது. கிராமம் என்பதற்கு நாட்டுப்புறம் என்ற வேறு பெயரும் உண்டு. அந்நாட்டுப்புறம் இயற்கை வளங்கள் நிறைந்த விவசாய நிலங்களையும் காடுகளையும் தன்னகத்தே கொண்டது. இவ்வுலகம் நிலைத்திருப்பதற்கு அடிப்படை காரணம் நாட்டுப்புறமே. அப்பகுதியில் வாழும் மக்கள்

பழந்தமிழர்களின் வாழ்வியல் நெறிகளைப் பாதுகாப்பவர்களாகத் திகழ்கின்றனர். அவர்கள் இயற்கையோடு இயைந்து, பாரம்பரிய மரபுகளைப் பின்பற்றி வாழ்கின்றனர். முன்னோர்கள் செய்த செயல்களில் உண்மைத்தன்மையும், நன்மையும் இருப்பின் அவற்றை பின்வரும் தலைமுறையினர் கடைபிடித்து வாழ்வது மரபு ஆகும். அதனடிப்படையில், "சூல்" புதினத்தில் காணக்கிடக்கும் நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் மரபுகளை அடையாளப்படுத்தும் விதத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது (Dharman, 2019).

## நாட்டுப்புற மரபுகள்

நாட்டுப்புற மக்களின் பண்பாடு என்பது நம்பிக்கை, பழக்கவழக்கம், சடங்கு, வழிபாடு போன்ற மரபுகளால் உருவானது. மரபு என்பதற்கு.

"எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்

செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" (Parimelalhagar, 2002)

அறிவில் உயர்ந்தோராகிய முன்னோர்கள் எந்த ஒரு பொருளை எந்தச் சொல்லால் எம்முறையால் சொன்னார்களோ அந்தப் பொருளை அச்சொல்லால் அம்முறையில் சொல்லுதலே மரபாகும் என்கிறது நன்னூல். இது முன்னோர் செய்த செயலுக்கும் பொருந்தும். பழமையைப் போற்றி பாதுகாப்பதும், மதித்து பின்பற்றுவதும் மரபாகும். அம்மரபுகள் இன்றளவும் நாட்டுப்புற மக்களிடம் நடைமுறையில் உள்ளன.

## சமுதாய அக்கறை

சமுதாயத்தில் உள்ள அனைத்து உயிர்களும் நலனும் பயனும் பெற வேண்டும் என்ற உயர் சிந்தனையால் விளைவது சமுதாய அக்கறை. அது பொதுநலம் சார்ந்தது. மனித பாண்பாட்டுக் கூறுகளில் இன்றியமையாதது. அச்சமுதாய அக்கறை என்பது ஓர் உயிர் பிற உயிர்களிடம் காட்டும் அன்பு, மனித நேயம், இரக்கம், கருணை உள்ளம், பிறருக்குத் துன்பம் தராமை, பிறர் துயரை நீக்குதல், என்று பல வடிவங்களில் வெளிப்படுகிறது. சமுதாயத்தின் மீதுள்ள அக்கறையால்தான் படைப்புகள் படைக்கப்படுகின்றன. எந்த படைப்பும் சமுதாய சிந்தனை கருத்துக்களியின்றி உருவாவதில்லை. எனவே, சூல் புதினத்தில் சமூக அக்கறை சார்ந்த கருத்துக்கள் ஆங்காங்கே நிரம்பி வழிகின்றன. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நோக்கத்தில் மக்களும் பிற உயிர்களும் பயணிக்கின்ற பொழுது வழிகளில் அமர்ந்து இளைப்பாறுவதற்கு நிழற்கூடங்கள், நந்தவனங்கள், பசியாற உணவுக்கூடங்கள் என்று நம் முன்னோர்கள் பல அறச்செயல்களைச் செய்துள்ளனர். அத்தகைய மரபுகளில் ஒன்றான தாகம் தணிக்கும்" தெலாக் கிணறுகள் ஊரைச் சுற்றிலும், காடுகளிலும் பல இடங்களில் இருக்கும். காடுகளில் வேலை செய்பவர்கள், ஆடுமாடுகள், உழவு அடிப்பவர்கள், வழிப்போக்கர்கள் போன்றவர்களுக்காவே வெட்டப்பட்டவை." (Dharman, 2019). நீரின்றி அமையாது உலகு என்பது பொன்மொழி. அதற்கேற்ப, அனைத்து உயிர்களுக்கும் நீர் தேவை என்பதை அறிந்து அவர்களுக்குப் பயன்படும் வகையில் சமூக அக்கறைவுடன் தெலாக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மேலும்,

"மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு இல்லென்ப

தன்உயிர் அஞ்சும் வினை" (Parimelalhagar, 2002)

என்ற வள்ளுவரின் வாக்கை வாழ்க்கையாக வாழ்ந்துள்ளனர் சூல் புதினத்தில் வரும் மக்கள் என்பது எண்ணத்தக்கது (Murugan, 2001).

## நம்பிக்கை

நம்பிக்கை அனைவரிடமும் இருக்கக்கூடிய அனுபவ அறிவு. பழமை வாய்ந்த இனத்தாரிடையே பல நம்பிக்கைகள் நிலைபெற்றிருக்கின்றன. அவற்றில் மூடநம்பிக்கைகள் மறைந்துவிட அறிவு சார்ந்த நம்பிக்கைகள் இன்னும் மக்களிடையே வாழ்கின்றன. "அச்சத்தின் காரணமாக மனிதன் இயற்கையின்

தோற்றத்தினையும், செயல்பாடுகளையும் தனது வாழ்வியல் நடப்புகளோடு இணைத்து நோக்கிய நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன" (Rajendran, 2006). தாவரங்கள், பறவைகள் போன்ற இயற்கை பொருட்களை அடிப்படையாகக் கொண்டு அந்நம்பிக்கைகள் உருவாகின்றன. "காரண காரியத் தொடர்புக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை என்றும், சான்றுகளின் அடிப்படையிலோ காரண காரிய தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை என்றும் கூறுவர் (Shanmugasundaram, 2007)." "நன்மையின்பால் உள்ள ஆர்வமும் தீமையின்பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைகட்கு அடிப்படை எனலாம் (Datchinamoorthy, 2005)." அதன் அடிப்படையில், மழை வருவதை," மழைக்கு கோப்பாயிச்சுனா, தூண்டில் போட்டா ஒரு மீனு படாது தைலான் குருவி தரையோட தாழப் பறந்து திரியும், ராத்திரியில நிலா கோட்ட கட்டும், எறும்பு முட்டைகளத் தூக்கிட்டு சாரை சாரையா மேடு தேடிப் போகும், ராவுல கூக கூப்பாடு போடும், காற்றடிக்கிறது நின்று வேக்காட்டம் கூடிவரும். இதெல்லாம் மூனாம் பக்கம் மழைக்கு அறிகுறி" (சூல்.ப.20) மக்கள் நிலவு, காற்று, இயற்கை உயிரினங்கள் போன்றவற்றின் செயல்பாடுகளைக் கொண்டு மழை வரும் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பது புலனாகிறது.

## திருவிழா

தமிழர் மரபுகளில் இன்றியமையாத இடத்தைப் பிடித்திருப்பது விழாக்கள். விழா என்பது அனைவரும் விரும்பி மகிழ்ந்து கொண்டாடுவது. அது அன்பையும் பண்பையும் வளர்க்கின்றது, உறவினை மேம்படுத்துகிறது. உள்ளத்திற்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தருகிறது. நம் முன்னோர்களை நினைப்படுத்துவதாகவும் வரும் தலைமுறையினருக்கு வழிகாட்டுவதாகவும் அமைகிறது. விழாக்கள், பண்பாடு, நாகரிகம், மொழி, வரலாறு, மரபு ஆகியவற்றை பறைசாற்றுவதாய் திகழ வேண்டும். "கொண்டாட்டமும் மகிழ்ச்சியும், பொழுதுபோக்கும், நல்லுறவுமே விழாக்களின் நோக்கமாகும்." தமிழர்கள் பல விழாக்களைக் கொண்டாடுகின்றனர். அதில் கண்மாய், ஏரி, குளங்களில் நடத்தப்படும் மீன்பிடி திருவிழா குறிப்பிடத்தக்கது (Muthiah, 1990).

## மீன்பிடி திருவிழா

தமிழகத்தில் கொண்டாடப்படும் பாரம்பரியத் திருவிழாக்களில் ஒன்று மீன்பிடித் திருவிழா. மாதம் மும்மாரி பொழியவும், அதனால் செழிப்பான விளைச்சல் உண்டாகவும் மேலும், மக்கள் மகிழ்ச்சியோடும் நிறைவோடும் வாழவும் மீன்பிடி திருவிழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவால் மக்களிடையே களிப்பும் ஒற்றுமையும் உருவாகிறது. "உருளைக்குடி கண்மாய் திருவிழாக் கூட்டமாய் மாறியது. கைவலைகளும் வீச்சுவலைகளும் மீன்களை அரித்துத் தட்டியும் மீன்கள் குறையவில்லை, தரையில் தட்டும் மீன்களைத் துள்ளவிடாமல் பிடித்து ஏனங்களில் நிரப்பும் பெண்கள், சிறுவர்கள் ஆகாயத்தில் வட்டமிட்டு விருட்டென்று மின்னலாய்த் தரையிறங்கி, குறி தப்பாமல் தன் விரல்களுக்கிடையில் மீன்களைத் தூக்கிச் செல்லும் பருந்துகள் கூட்டம்" (Dharman, 2019). இத்திருவிழாவில் மனிதர்கள் மட்டுமின்றி பறவைகளும் மீன்களை உணவாக பிடித்துச் செல்வதை அறிய முடிகிறது.

## வழிபாடும் சடங்கும்

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனித வாழ்வு பல பரிமாணங்களைப் பெற்றுள்ளது. மனிதனின் அச்சத்தின் காரணமாக தோன்றியதே வழிபாடு. இயற்கையின் பஞ்சபூதங்களும், மற்ற உயிரினங்களும் மனிதனுக்குப் பயத்தை ஏற்படுத்தின. அதன் விளைவாக அவற்றையெல்லாம் அவன் வழிபட ஆரம்பித்தான். அவ்வாறு தான் வழிபாடு தோன்றியது. "பண்டைக் காலம் முதல் மக்கள் துன்பங்கள் நீங்கி, உலகில் இன்பங்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கே வழிபாடு செய்து வந்துள்ளனர்" (Ramanathan, 1991). "வழிபாடு, விழா முதலிய சடங்குகள் மக்கள் பயன் கருதிச் செய்யப்படுவனவே மழைவளம் பெருகவும், தங்கள் வாழ்வு சிறக்கவும் தெய்வம் போற்றுகின்றனர்" (Shanmugam Pillai, 2003). அவ்வழிபாடுகள் காலகாலமாக முன்னோர்களால் செய்யப்பட்டு வந்த சடங்குகளை அடிப்படையாக வைத்து

பின்பற்றப்படுகின்றன." இரண்டு சாமிகளும் ஆளுக்கொரு மாவுக் கொட்டானைக் கையில் எடுத்துக் கொண்டார்கள். கூட்டம் ஒரு பக்கம் ஒதுங்கி நின்று வழிவிட்டது. இருவரும் வேகமாக ஓடி ஓரிடத்தில் நின்று கொண்டு மாவை கையில் எடுத்து காற்றில் வீசினார்கள்." மேகமே புகையாப்போ. மேகமே மழையாய் பொழியாத. மேகமே வெய்யிலுக்கு வழி விடு. மேகமே காத்தோட ஓடிப்போ." அப்பொழுது," காற்றில் தூவிய தூள் மாவு மேகமாய் மாறி காற்றோடு போனது. அதோடு சேர்ந்து மழையும் போய்விட்டது". உருளைக்குடியில் மழை விடாமல் தொடர்ந்து பல நாட்களாய் பொழிந்து கொண்டிருந்தது. அதனால் விவசாயம் உள்பட எந்த செயலும் நடைபெறவில்லை. மக்களின் இயல்புநிலை மாறியது. ஆகவே எங்களுக்கு மழை போதும் என்று கூறி மழையை வணங்கி, அது நிற்பதற்காக சடங்கினை மேற்கொள்கின்றனர். சிறுகசிறுக மழையும் நின்றது. இதில் தம் மரபான இயற்கை வழிபாட்டினை பாரம்பரியமாக மக்கள் மேற்கொண்டுள்ளனர் என்பது காட்சிப்படுத்தபட்டுள்ளது (Dharman, 2019).

## சொலவடைகள்

சொலவடை என்பவை சிறுசிறு தொடர்களாக வட்டார பேச்சு வழக்கில் வழங்கி வருபவை. இவை பேச்சுமொழியின் அழகியலையும், பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிருக்கும். நாட்டுப்புற மக்கள் பொருள் செறிவுள்ள சொலவடைகளை இயல்பாகப் பயன்படுத்துகின்றனர். சொலவடைகள் சொல்லும் கருத்திற்கு அடைவாக காட்டப்படுகிறது. சொலவடை பழமொழி போன்றது, ஆனால் நாட்டுப்புற மக்களின் வட்டார வழக்கினில் அமைந்தது. இவை இரண்டும் ஒன்றுதான். ஆனால், பயன்படுத்துகின்ற சொற்களால் வேறுபடுகின்றன. சொலவடைகள் கிராமத்து மக்களின் அன்றாட வாழ்வில் நடந்த அனுபவ அறிவால் உருவானவை. "பழமொழிகள் மக்கள் அனுபவத்தின் திரண்ட சாறு எனலாம். பல்லாண்டு அனுபவம் ஒரு வரியிலே திரட்டி உருட்டி மருந்து மாத்திரை போல் தரப்படுகிறது" (Datchinamoorthy, 2005). கண்மாயில் நிறைந்திருக்கும் மீன்கள் போல் சூல் புதினத்தில் சொலவடைகள் ஆங்காங்கே அனுபவ குறிப்புகளாய் பரந்து கிடக்கின்றன. "காலக் கொடுமைக்கு கரிச்சான் குருவி காவடி எடுத்து ஆடுச்சாம். உள்ளூர்க்காரனுக்கு பேய் பயம் வெளியூர்க்காரனுக்கு தண்ணி பயம்" அள்ள அள்ளக் கொறையாது பள்ளனோட களம், பாங்களத்த பாக்காது பள்ளனோட கண்ணு" என்று மக்களின் வாழ்வில் நடக்கும் செயல்களுக்குப் பொருத்தமாகவும் பயன்வுள்ளதாகவும் மேற்கண்ட சொலவடைகள் வெளிப்படுவதைக் காணமுடிகிறது (Dharman, 2019).

## நாட்டுப்புற மருத்துவம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் "என்பது பழமொழி. மனிதன் நோய் இன்றி இருத்தலே அவனுக்கு நிம்மதியைத் தரும். பண்டைய இலக்கியங்கள் நோய்கள் மற்றும் நோய்களை குணமாக்கும் முறைகள் பற்றி இயம்பியுள்ளன. "நாட்டுப்புற மருத்துவம் என்பது நாட்டுப்புற மக்களிடம் காணப்படும் நம்பிக்கை சார்ந்த இயற்கை மருத்துவத்தைக் குறிப்பதாகும்" (Muthiah, 1990). மருத்துவம் என்பது ஒரு கலை, அதை எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி தொண்டு போல் செய்ய வேண்டும். தமிழர்களின் பாரம்பரிய மருத்துவம் சித்த மருத்துவமாகும். இது சித்தர்கள் உருவாக்கியது. சித்தர்கள் பல மருத்துவ நூல்களைப் படைத்தளித்துள்ளனர். அச்சித்த மருத்துவம் நாட்டு மருத்துவம், இயற்கை மருத்துவம் என்றெல்லாம் வழங்கப்படுகிறது. இது தமிழரின் மரபுகளில் ஒன்றாகும். சூல் புதினத்தில், "அவன் கையில் வெள்ளைத் துணியில் சிறு பொட்டலமாய், அரைச்ச பச்சிலையை வைத்திருந்தான். பெரியசோலையைத் தூக்கி வைத்து கையில் வைத்திருந்த பொட்டலத்திலிருந்து இரண்டு மூன்று சொட்டுக்களை இரு நாசித்துவாரங்களிலும் பிழிந்து விட்டான். இதே போல் பொன்னுத்தாய்க்கும் மருந்து ஊற்றிப் படுக்க வைத்தான். முதல் தும்மல் பெரிய சோலையிடமிருந்தும், அடுத்த தும்மல் பொன்னுத்தாயிடமிருந்தும் வர, கூட்டம் மௌனத்தை விலக்கிச் சலசலத்தது" (Dharman, 2019). மின்னல் தாக்கி இறக்கும் தருவாயில் இருந்த இருவரையும் இயற்கை வைத்தியம் செய்து காப்பாற்றியதை மேற்கண்ட வரிகள் சுட்டுகின்றன. " தமிழ்நாட்டு மருத்துவம் பச்சிலைகளையும் வேர்களையும் பெரிதும் அடிப்படையாகக் கொண்டது." எனவே சங்க காலம் தொட்டு இன்றைய காலம் வரை நாட்டு மருத்துவம் சிறந்து விளங்குவதை அறிய முடிகிறது (Datchinamoorthy, 2005).


IOR PRESS

## பழக்க வழக்கங்கள்

பழக்க வழக்கம் என்பது மக்கள் தன் வாழ்வில் தொடர்ந்து பின்பற்றக்கூடிய செயல்முறைகளாகும். "நம்பிக்கைகளும் பழக்க வழக்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள்" (Sakthivel, 2016). காலம் காலமாக ஒரு சமூகத்தினரால், அச்சமூகத்தினருக்காகக் கடைபிடிக்கப்பட்டு வரும் செயல்கள், உறவுமுறைகள், கொள்கைகள் ஆகியவை பழக்க வழக்கம் எனப்படும். பழக்கம் என்பது தனிமனிதனின் செயல்பாடுகளைக் குறிக்கும். வழக்கம் என்பது ஒரு சமூகத்தின் செயல்பாடுகளைச் சார்ந்தாகும், பழக்கம் வழக்கம் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனிப்பட்ட முறையில் அமையும். அவ்வகையில், சூல் புதினத்தில் வரும் சமூகம் பல வழக்கங்களை மேற்கொள்வதைக் காணமுடிகிறது. “எங்க குடும்பமே கெட காவல்காரன் குடும்பம்னுதான் பேரு. எங்க தாத்தா சாகும் மட்டும் கெட காவல்தான் காத்தான். அதே மாதிரி எங்க அப்பனும் சாகும் மட்டும் கெட காவல்தான் காத்தான். இப்ப எங்க மாமன் பாக்கான். துணிஞ்ச ஆள்தான் அந்த வேல பாக்க முடியும்” (Dharman, 2019). என்று கூறுவதிலிருந்து ஊராரின் ஆடுகள் இரவில் வீடுகளற்ற நடுகாட்டில் பட்டியில் அடைக்கப்பட்டிருக்கும். அவற்றை நரி போன்ற விலங்குகளிடமிருந்தும், திருடர்களிடமிருந்தும், ஒருவர் இரவு முழுவதும் தூங்காமலிருந்து பாதுகாக்க வேண்டும். அதுவே கெட காவல் எனவும், அதை அவ்வூரார் வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதும் புலப்படுகிறது.

மேலும் சங்கஞ்செடிகளை வெட்டினால் கண்மாய் கரை இற்றுப் போகும் ஆதலால் அவற்றை வெட்டக் கூடாது. மேலும், அம்மக்கள் பாறையில் தானியம் உலர்த்தும் போது காவல் காப்பதில்லை. அது அவர்களின் வழக்கமாக உள்ளது. ஏனெனில் காவல் இருந்தால் பறவைகள் அவற்றை உண்ண வரும் போது விரட்டுவர், அதனால் பறவைகளுக்கு உணவு கிடைப்பதில்லை. ஆகையால் அவைகள் பயமின்றி உண்ண வேண்டும் என்பதற்காக அவ்வழக்கத்தைக் கடைப்பிடிக்கின்றனர். இவ்வழக்கங்கள் அனைத்தும் பொதுநலத்துடனும் சமூக அக்கறையோடும் பின்பற்றப்படுகிறது என்பது சிந்திக்கத்தக்கது. தியுள்ளன. அமைந்துள்ளன.

## முடிவுரை

நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கம் நம் நாட்டின் தொன்மையையும் மனித உணர்வுகளையும் வரலாற்றையும் பறைசாற்றுவதாய் விளங்குகிறது. அம்மக்களின் வாழ்வோடு ஒற்றிணைந்துள்ள நம்பிக்கைகள் அவர்களை வழிநடத்தியுள்ளன. நாட்டுப்புற மக்கள் கொண்டாடும் விழாக்கள் பண்பாடு, நாகரிகம் போன்றவை நிலைத்திருப்பதற்கும் வளர்வதற்கும் காரணிகளாக அமைந்துள்ளன. இயற்கையால் நன்மை, தீமை ஏற்பட்ட பொழுது, அவற்றிற்கு நன்றி செலுத்தவும், அவற்றை அமைதிப்படுத்தவும் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இயற்கை சார்ந்த அனுபவ அறிவின் வழியாக நாட்டுப்புற மக்களால் வழிவழியாக தொடர்ந்து வந்துள்ளது நாட்டுப்புற மருத்துவம். இன்றைய நாகரிக உலகில் மக்களின் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் மரபுகளான நம்பிக்கை, பழக்க வழக்கம், சடங்கு, விழா போன்றவற்றை அவர்கள் பின்பற்றி வருவதை “சூல்” புதினத்தின் வழி இக்கட்டுரையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

## References

Datchinamoorthy, A., (2005) Tamil Civilization and Culture, Yaazhl Veliyedu, Chennai, India.

Dharman, So., (2019) Sool, Adaiyalam Pathippagam, Trichy, India.

Murugan, P., (2001) Thirukkural, New Century Book House (P) Ltd., Chennai, India.

Muthiah, O., (1990) Folklore Traditions, Rural University, Gandhi Village, Dindigul, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Rajendran, A., (2006) Folk Cultural Traditions, Vanitha Pathippagam, Chennai, India.

Ramanathan, R., (1991), Folklore Studies, Tamil University, Thanjavur, India.

Sakthivel, S., (2016) Folklore Studies, Manivasagar Pathippagam, Chennai, India.

Shanmugam Pillai, M., (2003) Worship and Rituals of Sangathamizhar, International Institute of Tamil Studies, Chennai, India.

Shanmugasundaram, S., (2007) Folk Science, Kavya Publishing House, Chennai, India.

Thirugnanasampantham, S., (2009) Nannool Sollathikaram, Kadir Publishing House, Thiruvaiyaru, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License